# சந்தர்ப்பவாத நோய்கள்
# (OPPORTUNISTIC INFECTION)

Fact Sheet Number 500
அத்தியாயம் 500

**சந்தர்ப்பவாத நோய்கள் என்றால் என்ன?**

நமது உடலில் பாக்டீரியா, புரோடோஸா, புஞ்சை மற்றும் வைரஸ் போன்ற பல கிருமிகள் உள்ளது. நோய் எதிர்ப்பு அமைப்பு நன்றாக வேலை செய்யும் போது நமது உடலை இந்த கிருமிகளிடமிருந்து பாதுகாக்கிறது. எச்ஐவி அல்லது சில மருத்துவத்தினால் நோய் எதிர்ப்பு அமைப்பு பலவீனமடையும் பொழுது, இந்த கிருமிகள் நோய்களை ஏற்படுத்துகிறது.

நோய் எதிர்ப்பு அமைப்புகள் பலவீனமடைந்துள்ளதை பயன்படுத்திக்கொண்டு ஏற்படக்கூடிய நோய்கள் “சந்தர்ப்பவாத நோய்கள்” எனப்படுகின்றன. ஒஐ (OI) என்பது சந்தர்பவாத நோயின் சுருக்கம் ஆகும்.

**சந்தர்ப்பவாத நோய்க்கான பரிசோதனை**

நீங்கள் ஏதேனும் ஒர் சந்தர்ப்பவாத நோயினால் பாதிக்கப்பட்டு அதன் முடிவு பாசிட்டிவ் என்று இருந்தாலும் கூட நீங்கள் அந்த நோயினால் பாதிக்கப்படாமல் இருக்கலாம். உதாரணமாக, எச்ஐவி யுடன் இருக்கும் அனைவருக்கும் ஏறக்குறைய சைடோமேகலோவைரஸ் (CME) பரிசோதனை யின் முடிவு பாஸிடிவ் ஆக இருக்கும். ஆனால் இந்நோய் ஏற்படுவது மிகவும் அரிதானது எனெனில் சிடி 4 செல்லின் எண்ணிக்கை 50 ற்கும் கீழே குறைந்தால்லொழிய இந்நோய் ஏற்படாது.

நீங்கள் ஏதேனும் ஒரு சந்தர்ப்பவாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்தால், உங்களுடைய இரத்தத்தில் ஆன்டிஜென் (சந்தர்ப்பவாத நோய்களை ஏற்படுத்தக்கூடிய கிருமிகளின் சில பகுதிகள்) அல்லது ஆன்டிபாடி (கிருமிகளை அழிப்பதற்காக நோய் எதிர்ப்பு அமைப்பினால் உருவாக்கப்படும் புரோட்டின்) பரிசோதனை செய்யப்பட வேண்டும். பரிசோதனையில் ஆன்டிஜென் கண்டுபிடிக்கப் பட்டால், நீங்கள் தொற்றுக்குள்ளாகியிருக்கிறீர்கள் என்று அர்த்தம். ஆன்டிபாடிஸ் கண்டுபிடிக்கப் பட்டால், நீங்கள் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் ஒருவேளை அந்த தொற்றை தடுக்கும் சக்தி படைத்தவராக (Immunized) இருக்கலாம் அல்லது உங்களுடைய நோய் எதிர்ப்பு அமைப்பு தொற்றுக்களை நீக்கி இருக்கலாம் அல்லது நீங்கள் ஒருவேளை தொற்றுக்குள்ளாகி இருக்கலாம். நீங்கள் ஏதேனும் ஒரு கிருமியினால் பாதிக்கப்பட்டிருந்தால் அது ஒர் சந்தர்ப்பவாத நோயினை ஏற்படுத்தும், மற்றும் அந்த சந்தர்ப்பவாத நோயினை விருத்தி செய்யும் அளவிற்கு உங்களது சிடி 4 செல்கள் குறைவாக இருந்தால், உங்களது சுகாதார நல பணியாளர் தற்போதுள்ள நோயிற்கான அறிகுறிகளை பார்க்கலாம். இவைகள் ஒவ்வொரு சந்தர்ப்பவாத நோயிற்கும் இது மாறுபடும்.

**எய்ட்ஸ் மற்றும் சந்தர்ப்பவாத நோய்கள்**

நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும் எச்ஐவி யினால் பாதிக்கப்படாதவர்களுக்கும் சந்தர்ப்பவாத நோய்கள் ஏற்படலாம். உதாரணமாக புற்றுநோய் சிகிச்சைக்காக பயன்படுத்தும் மருந்துகள் நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கும். புற்றுநோய்க்கு சிகிச்சை எடுத்துக்கொள்ளும் சிலருக்கு சந்தர்ப்பவாத நோய்கள் ஏற்படுகிறது.

எச்ஐவி நோய் எதிர்ப்பு சக்தியை பாதிப்பதால் சந்தர்ப்பவாத நோய்கள் ஏற்படுகிறது. நீங்கள் எச்ஐவி யினால் பாதிக்கப்பட்டு சந்தர்ப்பவாத நோய்கள் ஏற்பட்டிருந்தால் உங்களுக்கு எய்ட்ஸ் இருக்கலாம்.

**மிகவும் பொதுவான சந்தர்ப்பவாத நோய்கள் யாவை?**

எய்ட்ஸ் பரவிய ஆரம்பகாலங்களில் சந்தர்ப்பவாத நோய்களினால் அதிகமானோர் பாதிக்கப்பட்டார்கள் மற்றும் இறந்தார்கள். ஏஆர்டி சிகிச்சையை பாதிக்கப்பட்ட மக்கள் எடுத்துக்கொள்ள ஆரம்பித்த பிறகும் சிலருக்கு சந்தர்ப்பவாத நோய்கள் ஏற்பட்டது. எச்ஐவி யால் பாதிக்கப்பட்ட மக்களில் எத்தனை பேருக்கு எந்த வகையான சந்தர்ப்பவாத நோய்கள் ஏற்பட்டது என்பது பற்றிய தெளிவான தகவல் இல்லை.

பெண்களில் பால்வினை நோய்கள் (பெண்குறி பகுதியில் ஏற்படக்கூடிய உடல் நிலை பிரச்சினைகள்) எச்ஐவிற்கான ஆரம்ப அறிகுறிகளாக இருக்கலாம். அவைகளில் கருக்குழாய்களில் ஏற்படும் நோய்கள் (Pelvic Inflammatory Disease) மற்றும் பாக்டீரியல் வெஜினாஸிஸ் (Bacterial Vaginosis) அடங்கும். மேலும் தகவல்களுக்கு அத்தியாயம் 610 ஐ பார்க்கவும்.

மிகவும் பொதுவான சந்தர்ப்பவாத நோய்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன, அதனுடன் அவைகள்

ஏற்படுத்தும் நோய்கள் மற்றும் சிடி4 செல்களின் எண்ணிக்கை குறையும் பொழுது ஏற்படும் நோயின் தீவிரத்தன்மைகளும் கொடுக்கப்பட்டுள்ளது.

- **கேண்டிடயாஸிஸ் (வாய்நோய்த் தொற்றுக்கள்):** வாய், தொண்டை அல்லது பெண்குறியில் ஏற்படக்கூடிய ஒரு பங்கல் தொற்று. சிடி4 செல் அளவு: சிடி4 செல் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் போது கூட ஏற்படலாம். அத்தியாயம் 501 ஐ பார்க்கவும்.
- **சைட்டோமேகலோவைரஸ்** (CME): இது ஒரு வைரஸ் தொற்று. இவை கண்களில் நோய்களை ஏற்படுத்தி கண்பார்வையை இழக்கச் செய்திடும். சிடி4 செல் அளவு: 50 ற்கும் கீழ் குறையும் போது ஏற்படும். அத்தியாயம் 504 ஐ பார்க்கவும்.
- **ஹெர்பிஸ் சிம்ப்ளக்ஸ் வைரஸ்:** வாய் அல்லது பிறப்புறுப்பு பகுதிகளில் புண்களை ஏற்படுத்தும். இவைகள் ஒருஅளவிற்கு பொதுவானவை ஆனால் எச்ஐவி தொற்று இருந்தால் திடீர் திடீர் என்று மிகவும் அடிக்கடி தோன்றும் மற்றும் மிகவும் தீவிரமாகவும் இருக்கும். இவைகள் சிடி4 செல்லின் எந்த எண்ணிக்கையிலும் ஏற்படும். அத்தியாயம் 508 ஐ பார்க்கவும்.
- **மலேரியா:** வளரும் நாடுகளில் இவை மிகவும் பொதுவானவை. எச்ஐவி யால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகவும் பொதுவானவை மற்றும் தீவிரமானவை.
- **மைக்கோபாக்டீரியம் ஏவிஎம் காம்ளக்ஸ்** (MAC or MAI): இது ஒரு பாக்டீரியா தொற்று. இது தொடர்ச்சியான காய்ச்சல், பொதுவான வியாதிகளுக்கான உணர்வுகள், ஜீரணமாதலில் பிரச்சினைகள், மற்றும் அதிகமான எடை இழப்பு போன்றவற்றை ஏற்படுத்தும். அத்தியாயம் 514 ஐ பார்க்கவும்.
- **நியூமோசிடிஸ் நிமோனியா** (PCP): கொல்லும் சக்தியுடைய நிமோனியாவை ஏற்படுத்தும் ஒரு ஃபங்கல் தொற்று ஆகும். சிடி4 செல் அளவு: 200 ற்கும் கீழ் குறையும் போது ஏற்படும். அத்தியாயம் 515 ஐ பார்க்கவும். எதிர்பாராதவிதமாக, எச்ஐவி சிகிச்சை எடுப்பவருக்கும் அல்லது எச்ஐவி பரிசோதனை செய்யாதவருக்கும் இன்னமும் ஒருஅளவிற்கு ஏற்படக்கூடிய ஒரு பொதுவான சந்தர்ப்பவாத நோய் இது ஆகும்.
- **டாக்ஸோப்ளாஸ்மோஸிஸ் (டாக்ஸோ):** இது மூளையில் ஏற்படக்கூடிய ஒரு புரோடஸால் தொற்று ஆகும். சிடி4 செல் அளவு: 100 ற்கும் கீழ் குறையும் போது ஏற்படும். அத்தியாயம் 517 ஐ பார்க்கவும்.
- **காசநோய்** (TB): இது நுரையீரல், சுரப்பிகள் மற்றும் உடம்பில் உள்ள மற்ற பகுதிகளை தாக்கக்கூடிய ஒரு பாக்டீரியா தொற்று. இந்தியாவில் எச்ஐவி யுடன் வாழும் மக்களில் இருக்கக்கூடிய மிகவும் பொதுவான சந்தர்ப்பவாத நோய் காசநோய் ஆகும். சிடி4 செல் அளவு: காசநோயினால் பாதிக்கப்பட்டு பரிசோதனையில் பாசிடிவ் ஆன எச்ஐவி யால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சிகிச்சை அளிக்க வேண்டும். அத்தியாயம் 518 ஐ பார்க்கவும்.

**சந்தர்ப்பவாத நோய்களை தவிர்த்தல்**

பெரும்பாலான கிருமிகள் சந்தர்ப்பவாத நோய்களை பொதுவாக ஏற்படுத்தும், மற்றும் நீங்கள் ஏற்கனவே சில சந்தர்ப்பவாத நோய்களுடன் இருக்கலாம். நீங்கள் புதிய தொற்றுக்கள் ஏற்படுவதற்கான ஆபத்தை குறைக்க சுத்தமாகவும் மற்றும் சந்தர்ப்பவாத நோய்களை ஏற்படுத்தக்கூடிய கிருமிகள் பற்றிய தெரிந்த காரணிகளை தவிர்க்கவும் வேண்டும்.

ஏதேனும் சந்தர்ப்பவாத நோயினால் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும், நீங்கள் மருந்துகளை எடுத்துக் கொள்வதன் மூலம் அந்த நோயினை மேலும் தீவிரம் அடையாமல் தடுக்கலாம். இதனையே ப்ரோஃபிலாக்ஸிஸ் என்கிறோம். தரமான ஏஆர்டி எடுத்துக்கொள்வது சந்தர்ப்பவாத நோய்களை தடுப்பதற்கு மிகச்சிறந்த வழியாகும். ஏஆர்டி பற்றிய மேலும் தகவல்களுக்கு அத்தியாயம் 403 ஐ பார்க்கவும்.

**சந்தர்ப்பவாத நோய்களுக்கு சிகிச்சை அளித்தல்**

ஒவ்வொறு சந்தர்ப்பவாத நோய்க்கும் எதிராக நன்கு வேலை செய்வதற்காக குறிப்பிட்ட மருந்துகள் அல்லது கூட்டு மருந்துகள் உள்ளன. ஒவ்வொரு சந்தர்ப்பவாத நோய்களுக்கும் எப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதனை பற்றி மேலும் தெரிந்துகொள்ள சந்தர்ப்பவாத நோய்களின் அத்தியாயங்களை பார்க்கவும்.

வலுவான ஏஆர்டி மாத்திரையினால் பாதிக்கப்பட்ட நோய் எதிர்ப்பு மண்டலம் திரும்பவும் சரியாகி, சந்தர்ப்பவாத நோய்களுக்கு எதிராக நன்றாக போராடுவதற்கு வழிவகுக்கும். இது தொடர்பான மேலும் தகவல்கள் பற்றி அறிய நோய் எதிர்ப்பு சக்தி புதுப்பித்தலுக்கான அத்தியாயம் 481 ல் உள்ளது.

A Project of the New Mexico AIDS Education and Training Center. Partially funded by the National Library of Medicine
Fact Sheets can be downloaded from the Internet at http://www.aidsinfonet.org